# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 நவம்பர் திங்கள் 27 –ம் நாள் (27.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் கொண்டுவரும் இரங்கல் தீர்மானம்:**

இந்நகர்மன்றத்தின் துணைத் தலைவரும், 5–வது வார்டு நகர்மன்ற உறுப்பினருமாகிய திரு.அ.ஜேசுராஜன் அவர்கள் 16.11.2014 அன்று இயற்கை எய்தினார். அன்னாரது ஆத்மா சாந்தியடைவதற்காக இறைவனை பிரார்த்தித்து, மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கலாம்.
**தீர்மானம் எண்.1034 ஏகமனதாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**31.10.2014–ம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்**
**பொருள் எண். 1**
**இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**
குளச்சல் நகராட்சி பழமைவாய்ந்த நகராட்சி, நகராட்சி எல்கையை பொறுத்தமட்டில் பரப்பளவில் குறைவாக இருந்தாலும், 24 வார்டுகளும், ஒவ்வொரு வார்டுகளுக்கும் உட்பட்ட தெருக்கள் அதிகமாக உள்ளது. குறைந்த பரப்பளவு கொண்ட நகராட்சியில் தெருக்களுக்கு தகுந்தாற்போல் தெருவிளக்குகளும் சுமார் 1700 –க்கு மேல் அமையப் பெற்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியை பொறுத்தமட்டில், எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. அதனால் பெரிய அளவு வருமானமும் இல்லை. நகராட்சிக்கு வரும் குடிநீர் இணைப்பின் வரவில் கணிசமான தொகை பராமரிப்பு பணியிலேயே செலவாகி விடுகிறது. தற்போது மின்சார கட்டண உயர்வு என்ற நிலை வரும்போது நகராட்சியால் அந்த கட்டண உயர்வை ஈடுகட்ட முடியாத நிலை உருவாகிவிடும். அதன் காரணம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளிலும் தொய்வான நிலை ஏற்படும். பல தெருக்களுக்கு போதிய தெருவிளக்கு வசதிகளை செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கும். இந்நிலையில் மின்சார கட்டண உயர்வு என்பது நகராட்சியால் பராமரித்து வரும் தெருவிளக்குகளை 100% என்ற கணக்கில் சரியாக பயன்படுத்த முடியாது. எனவே நகராட்சியின் நிதிநிலையையும், பொதுமக்கள் தெருக்களில் இருட்டில் நடந்து செல்கின்ற நிலை ஏற்படாமலும் தடுத்திட இதுபோன்ற செயல்களால் அரசுக்கும் அவப்பெயர் வராமல் காத்திட, நகராட்சியின் மின்கட்டண உயர்வுக்கு விலக்கு அளித்திட மாவட்ட நிர்வாகத்தையும், தமிழக அரசையும், மின்சார ஆணையத்தையும் கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
**தீர்மானம் எண்.1035 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**
இந்நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்கள் 2013–14–ல் மேற்கொண்ட பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி தொடர்பான விபரங்கள் Online–ல் ஏற்றம் செய்யும் பணியானது Jacob & Jacob மார்த்தாண்டம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிக்கான தொகை ரூ.3,000/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/7714/2008)

**தீர்மானம் எண்.1036 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வெட்டுமடை பகுதியில், விநாயகர் சிலைகளை கடலில் கரைக்கும் நிகழ்ச்சியை முன்னிட்டு ஏ.வி.எம். கால்வாயை சுற்றி தடுப்பு சுவர் அமைத்து, சுத்தம் செய்து, ஜெனரேட்டர் மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்யும் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.21,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு, பட்டியல் தொகை வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். இ1/2292/14)

**தீர்மானம் எண்.1037 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மற்றும் முதன்மை பொறியாளர், சென்னை ஆகியோரின் நேரடி அறிவுரையின்படியும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 24.10.2014–ம் தேதிய வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நேரடி அறிவுரையின்படியும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை சுத்தம் செய்வதற்கும், வால்வு பிட்டுகளை சுத்தம் செய்வதற்கும், நீர்நிலைகளை சுத்தமாக வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள தினக்கூலி அடிப்படையில் 4 பணியாளர்களை 89 நாட்களுக்கு பணிக்கு அமர்த்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2691/2014)

**தீர்மானம் எண்.1038 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் பகுதியில் அமைந்துள்ள கதவு எண்.26–38 கட்டிடம் திரு.சாலமோன் என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி குடிநீர் வரிவிதிப்பு எண்.2329–ன் மீது வரி நிலுவை எதுவும் இல்லை. எனவே குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மனுதாரர் கோரியுள்ளார். மேற்படி மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று, கதவு எண்.26–38–ல் உள்ள குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2464/2014)

**தீர்மானம் எண்.1039 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

வடகிழக்கு பருவமழை வருவதையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டெங்கு நோய் தடுப்பிற்கான அபேட் மருந்து தெளித்தல், வாறுகால்களை தூர் வாருதல், புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ளுமாறு 16.10.2014 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். தினமும் அபேட் மருந்து தெளித்தல், புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தற்போது நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள தினக்கூலி அடிப்படையில் 5 துப்புரவு பணியாளர்களை 89 நாட்களுக்கு பணியமர்த்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2162/2012)

**தீர்மானம் எண்.1040 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் செடிகள் மற்றும் புதர்கள் அதிகமாக வளர்ந்துள்ள காரணத்தால் அடிக்கடி பூச்சிகள் வருவதாக புகார்கள் வந்துள்ளது. மேற்படி புதர்கள் மற்றும் செடிகளை ஜே.சி.பி.மூலம் அகற்ற ஆகும் உத்தேச செலவு ரூ.15,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2162/2012)

**தீர்மானம் எண்.1041 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி TN-74-Z-8931, TN-74-Z–2339, TN-74–5507 ஆகிய மூன்று வாகனங்களும் பயன்படுத்த முடியாமல் கழிவு செய்ய ஒதுக்கி விடப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை கழிவு செய்ய தானியங்கி பணிமனை, நாகர்கோவிலில் இருந்து ஆய்வு செய்ய, தானியங்கி பொறியாளர் ஆய்வு செய்த வகையில் வாகனம் ஒன்றுக்கு ரூ.750/– வீதம் மூன்று வாகனங்களுக்கு ரூ.2,250/– வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2259/2013)

**தீர்மானம் எண்.1042 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு காம்பேக்டர் லாறி TN-75 L 2565–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, பணியினை நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் பழுதினை நீக்கம் செய்த வகையில் ரூ.8,100/– வழங்கியதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.1043 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள தீயணைப்பு ஊர்தி நிறுத்தும் இடம், ரேஷன் கடை மற்றும் அம்மா உணவக கட்டிடம் ஆகியவற்றிற்கு புதிதாக மின் இணைப்பு வழங்குவதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.7,510/– ஐ செலுத்துமாறு தமிழ்நாடு மின்சார வாரியம், குளச்சல் அவர்களிடம் இருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/ 2379/2014)

**தீர்மானம் எண்.1044 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோடு பகுதியில் சாலை மிகவும் மோசமாக பழுதடைந்து குண்டும், குழியுமாக காணப்படுகிறது. இதனால் போக்குவரத்திற்கும், பாதசாரிகளுக்கும் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வந்தது. மேலும் தற்போது பெய்த மழையினால் கூடுதல் சேதம் ஏற்பட்டுள்ளதால் . பொது நலனை கருத்தில் கொண்டு மேற்படி சாலையில் தற்காலிக ஒட்டுப்பணிகள் ( Patch works) மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2663/14 )

**தீர்மானம் எண்.1045 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல் இராஜாக்கமங்கலம் பிரதான சாலையில் இருந்து பண்டகசாலைபுரம் செல்லும் சாலை முகப்பில் அமைந்துள்ள சிறுபாலம் உடைந்து கழிவுநீர் வெளியே செல்லமுடியாமல் உள்ளதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் புதிதாக சிறுபாலம் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,80,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2667/14)

**தீர்மானம் எண்.1046 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி குருசடி அருகில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதற்கும், கொட்டில்பாடு பகுதியில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதற்கும், மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகையில் 90% I புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மான்யமாக பெறுவதற்கும், மீதமுள்ள 10% ஐ இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.838 மற்றும் 851 நாள் 21.02.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டதில், நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5576/2013/யுபி1 – நாள் 17.09.2014–ன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி குருசடி அருகில் மற்றும் கொட்டில்பாடு பகுதிகளில் பூங்கா அமைப்பதற்காக ரூ.18.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்தரவு வரப்பெற்றுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். இ1/ 4585/2009)

**தீர்மானம் எண்.1047 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டு வரும் அம்மா உணவக கட்டிடப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளதால், மேற்படி உணவகத்திற்கு தேவையான பாத்திரங்கள், மேஜைகள் வாங்குவதற்கும், மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீருக்கான R.O Plant அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6,50,000/–க்கும், மேற்படி செலவுத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2666/14 )

**தீர்மானம் எண்.1048 குளச்சல் நகராட்சியின் பொது நிதியின் கீழ் வரும் வருமானத்தை கணக்கில் கொண்டு, இப்பொருள்களை வாங்கிட இயலாத நிலையில், திட்டநிதியை எதிர்நோக்கி செலவு தொகையினை ஏற்றிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தினுள் அமைந்துள்ள கடைகள் கட்டப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், மேற்படி கடைகளின் சுவர், தரை, சீலிங் மற்றும் போர்டிகோ ஆகியவை பழுதடைந்து காங்கிரீட் உடைந்து கம்பிகள் தெரியும் வகையில் ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே மேற்படி கடைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3,20,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2660/14)

**தீர்மானம் எண்.1049 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சி கணனி அறையில் இருக்கும் UPS (5 KV) -க்கான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) 02.11.2014–வுடன் முடிவடைகிறது. Novateur Electrical and Digital Systems நிறுவனத்தார் கடந்த வருடம் நல்லமுறையில் பராமரித்து தந்துள்ளார்கள். அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய AMC அவசியம் என்பதால் 03.11.2014 முதல் 02.11.2015 வரையிலான AMC ஒப்பந்தத்தை UPS சப்ளை செய்த Novateur Electrical and Digital Systems நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ள அதற்கான கட்டணம் ரூ.8,411/– வழங்க மன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/3562/07)

**தீர்மானம் எண்.1050 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

நகராட்சி அலுவலக கணனி அறை சுவரில் ஒட்டப்பட்டுள்ள பிளைவுட் கரையான் அரித்து மிக மோசமாக பழுதடைந்துள்ளதால், பிளைவுட்டை மாற்றி சுவரில் டைல்ஸ் பதித்து ஒயரிங் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவு கட்டிடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3,30,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2661/14 )

**தீர்மானம் எண்.1051 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**31.10.2014–ம் தேதியன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்**

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, துறைமுகத்தெரு–1–ல் பொழிமுகம் அருகில் வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையின் மேற்பரப்பில் பாய்வதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை மற்றும் சாலை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். இ1/2664/14)

**தீர்மானம் எண்.1052 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10–ல் குடிநீர் குழாயில் ஏற்பட்ட உடைவை சரி செய்யும் பணியின் போது தோண்டப்பட்ட சாலையானது தற்போது பெய்த கனமழையினால் சேதமடைந்து குண்டும், குழியுமாக காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பகுதியில் காங்கிரீட் சாலை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2665/14)

**தீர்மானம் எண்.1053 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 –ல் கொட்டில்பாடு கல்லறை தோட்டம் முன்புறம் செடிகள் மற்றும் புதர்கள் அதிக அளவில் வளர்ந்துள்ளதால், விஷ ஜந்துக்கள் அதிகமாக நடமாடுவதாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி கல்லறை தோட்டம் முன்புறம் நகராட்சி சாலையை விரிவுபடுத்தி காங்கிரீட் சாலை அமைக்கவும், கல்லறை தோட்டம் அருகில் வடிகால் ஓடை உடைந்துள்ளதை சரி செய்யும் பணியினை மேற்கொள்வதற்கும், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2662/14)

**தீர்மானம் எண்.1054 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் பொதுநிதியின்கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரேஷன்கடை கட்டிடத்தினை மாத வாடகைக்கு விடுவதற்கு விதிகளின்படி தரை வாடகையாக ரூ.1,500/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1201/2014)

**தீர்மானம் எண்.1055 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் பொதுநிதியின்கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தீயணைப்பு ஊர்தி நிறுத்தும் இடம் கட்டிடத்தினை மாத வாடகைக்கு விடுவதற்கு விதிகளின்படி தரை வாடகையாக ரூ.1,250/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1856/2014)

**தீர்மானம் எண்.1056 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**27.11.2014–ம் தேதிய சாதாரணக்கூட்ட பொருள்கள்**

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு அடையாள அட்டை எடுக்கும் பணியினை மேற்கொள்வதற்கு நிரந்தரமாக மையம் அமைக்க கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.4419/2014/அ1 நாள் 12.11.2014–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிரந்தர மையத்தை கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.31–ல் அமைப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/3629/2014)

**தீர்மானம் எண்.1057 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மனித கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் அவர்களை சார்ந்தோர் சுகாதாரமற்ற கழிப்பிடங்களில் மனித கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோரை கண்டறிந்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தொடர்பான அறிக்கையினை மாலைமுரசு நாளிதழில் விளம்பரப்படுத்திய வகையில் ரூ.8,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/216/2014)

**தீர்மானம் எண்.1058 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி தொடர்பான விளம்பரங்களை கீழ்க்காணும் விபரங்களின்படி தினசரி நாளிதழ்களில் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணங்களை வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தினத்தந்தி நாளிதழ் (தொழில் மலர் 2014) | ரூ.25,000/– |
| 2 | தினகரன் நாளிதழ் (தொழில் மலர் 2014) | ரூ.9,800/– |
| 3 | மாலை மலர் நாளிதழ் (தீபாவளி மலர் 2014) | ரூ.12,000/– |
| 4 | மாலை முரசு நாளிதழ் (தீபாவளி மலர் 2014) | ரூ.10,000/– |
| 5 | மாலை முரசு நாளிதழ் (தீபாவளி மலர் 2014) | ரூ.20,000/– |
| | மொத்தம் | ரூ.76,800/– |

மேற்காணும் தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை அலுவலகங்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2045/2012)

**தீர்மானம் எண்.1059 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் அமைந்துள்ள 200 KVA ஜெனரேட்டர் அமைந்திருக்கும் அறையின் பின்னால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் (Transformer) மின்மாற்றி அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு ஆகியவற்றிற்கும், புதிய மின் இணைப்பு பெறுவதற்கும், மதிப்பீட்டு கட்டணமாக ரூ.18,800/– ஐ பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியம், குளச்சலுக்கு செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/2379/2014)

**தீர்மானம் எண்.1060 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி